# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1914/41 - 2015 මැයි මස 15 වැනි සිකුරාදා - 2015.05.15

*1914/41 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மத்திய மாகாண மாகாண சபை**

துணைவிதிகள்

**மினிப்பே பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அதே சட்டத்தின் 126 ஆவது பிரிவின் (iii) ஆம் உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மினிப்பே பிரதேச சபை மூலம் தயாரிக்கப்பட்ட பின்வரும் துணைவிதிகள் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (பிரித்தெடுக்கப்பட்ட) ஏற்பாடுகள் சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) (அ) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய மேற்குறித்த பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதெனவும், இந்த அறிவித்தல் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து மேற்குறித்த துணை விதிகள் மினிப்பே பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் செயலுக்கு வருமெனவும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.*

சரத் ஏக்கநாயக்க,
மத்திய மாகாண முதலமைச்சரும்
உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரும்.

மத்திய மாகாண முதலமைச்சர் அலுவலகம்,
கண்டி,
*2015, பெப்புருவரி 19.*

மினிப்பே பிரதேச சபை

***வரி அறவிடுவது சம்பந்தமான தகவல்களைப் பெற்றுக்கொள்வது பற்றிய துணைவிதிகள்***

1. இந்தத் துணை விதிகள் மினிப்பே பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் எல்லா வர்த்தக நிலையங்கள் மற்றும் கைத்தொழில்கள் சம்பந்தமாக வரி அறவிடுவதற்குரிய தகவல்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பான துணைவிதிகள் என அழைக்கப்படும்.

2. இந்தத் துணைவிதிகள் மினிப்பே பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் எல்லா வர்த்தக நிலையங்கள் மற்றும் கைத்தொழில்கள் சம்பந்தமாக வரி அறவிடும் கருமங்களுக்கெனத் தேவைப்படும் கணக்கு அறிக்கைகள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளத் தேவையான தவணை அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதை முறைப்படுத்துவதற்கென விதிக்கப்படுகின்றன.

3. மினிப்பே பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ள எல்லா வர்த்தக, வியாபார, இயக்கங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு முறைகளுக்கமையத் தெளிவான கணக்கு அறிக்கைகளைப் பேணிவருதல் வேண்டும்.

4. தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள் மூலம் வேண்டப்படும் அனைத்து நிதி மற்றும் கணக்குகளுக்குரிய தகவல்களை வழங்குதல், பிரதிகளை வழங்குதல் என்பன வர்த்தக வரிக்கு உட்படும் ஒருவரது கடமையாக அமையும்.

5. தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களால் காலத்துக்குக்காலம் வேண்டப்படும் அனைத்து வர்த்தகத் தகவல்கள் மற்றும் நிதி, கணக்குகள் பற்றிய அறிக்கைகள் என்பவை கணக்கீட்டு எண்ணக்கருக்களுக்கு அமையத் தயாரிக்கப்பட்டவையாக இருத்தல் வேண்டும்.

6. மேற்குறித்த 05 ஆவது துணைவிதியின் கீழ் முன்வைக்கப்படும் அனைத்து நிதித் தகவல்களும் கணக்கறிக்கைகளும் அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வாளர் ஒருவரால் பரிசீலிக்கப்பட்டுச் சான்றளிக்கப்பட்டவையாக இருத்தல் வேண்டும்.

7. மினிப்பே பிரதேச சபையின் செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் விடுக்கப்படும் அறிவித்தல் கிடைத்த எவரேனும், குறித்த அறிவித்தல் தமக்குக் கிடைத்த 14 நாட்களுக்குள் அதில் வேண்டப்பட்டுள்ள தகவல்களைச் செயலாளரிடம் முன்வைத்தல் வேண்டும்.

8. பிழையான தகவல்களை வழங்குவதோ அல்லது தகவல்களை வெளியிடாது இருத்தலோ குற்றமாகக் கருதப்படும்.

9. மேற்குறித்த 5 ஆம் துணைவிதியின் கீழ் கேட்கப்படும் தவணை அறிக்கைகளுக்கமையத் தகவல்களைப் பரிசீலிப்பதற்குத் தேவைப்படின், உரிய வர்த்தக நிலையம், தொழிற்சாலையின் வளவுக்குள் வந்து தலைவர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் குறித்த ஏடுகளின் மெய்த்தன்மையைப் பரிசீலிப்பது சட்டபூர்வமானதாக அமையும்.

10. இந்தத் துணைவிதிகளின் ஏதேனும் ஒரு ஏற்பாட்டை மீறுவதும் அல்லது தகர்ப்பதும் குற்றமாவதுடன், உரிய அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால், விதிக்கப்படக்கூடிய உச்ச தண்டனைக்கும், குறித்த மீறல்கள் தொடர்ந்தும் செய்யப்பட்டுவரின் அது பற்றி குற்றவாளியாக்கப்பட்டும் அல்லது அந்த மீறல்கள் பற்றித் தலைவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் இது பற்றி எழுத்துமூலம் அறிவித்தும் தொடர்ந்தும் மீறும் பட்சத்தில், அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு நாளைக்கும் என விதிக்கப்படக்கூடிய மேலதிக தண்டத்தின் உச்ச அளவுக்கும், முறையே 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் (2) ஆவது உப பிரிவின்படி விதிக்கப்படக்கூடிய உச்ச அளவுத் தண்டத்துக்கும் மேலதிகத் தண்டத்துக்கும் உட்படுதல் வேண்டும்.

11. 10 ஆம் துணை விதியின் கீழ் விதிக்கப்படும் தண்டத் தொகை பிரதேச சபையின் பொது நிதியத்தில் வைப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

12. பதங்களுக்கான விளக்கம் தேவைப்பட்டாலன்றி இந்தத் துணைவிதிகளின் சொற் பதங்கங்களின் விளக்கம் :-

" சபை" என்பது, மினிப்பே பிரதேச சபையையும்;

"தலைவர்" என்பது, மினிப்பே பிரதேச சபையின் தலைவரையும் ;

"அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பது, மினிப்பே பிரதேச சபையின் தலைவரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு அலுவலரையும் குறிப்பிடும்.

13. இந்தத் துணைவிதிகளின் சிங்கள, தமிழ், ஆங்கில வாசகங்களிடையே கருத்து மயக்கம் ஏற்படும் பட்சத்தில் சிங்கள வாசகங்களே மேலோங்கி நிற்கும்.

5- 801

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.